செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

நாள்: **10.12.2024**

## மொழியியல் புலம்

## தமிழ் எழுத்திலக்கண மரபு

### பயிலரங்கம் - 17

## Treatment of Phonology in Tamil Grammar
## (22.1.2025 - 31.1.2025)

### அறிவிப்பும் அழைப்பும்

பல்வேறு மொழிகளின் தாயகமாகத் திகழும் நமது நாட்டில் தமிழ்மொழி தொன்மையானதாகவும் நீண்ட இலக்கணப் பாரம்பரியமும் உடைய உயர்தனிச் செம்மொழியாகத் திகழ்கிறது. எண்ணிலடங்கா இலக்கிய வகைமைகள் தமிழ் மொழியில் உள்ளன. அதேபோன்று இவ்விலக்கியங்களுக்கு வரையறைகளை வகுத்துக்கூறும் இலக்கண நூல்களும் பல உண்டு. இத்தகைய தமிழ் மொழியின் இலக்கண நூல்களில் எழுத்திலக்கண மரபின் தோற்றம், வளர்ச்சிநிலை ஆகியன குறித்து ஆராய்தலே இப்பயிலரங்கின் நோக்கமாகும்.

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கண மரபினையுடையது தமிழ் மொழி. இம்மொழியில் ஐந்திலக்கணத்தையும் கூறும் நூல்களும், எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் கூறும் நூல்களும், பொருளிலக்கணத்தை மட்டும் கூறும் நூல்களும், யாப்பினை மட்டும் விளக்கும் நூல்களும், அணியிலக்கணத்தை மட்டும் விதந்தோதும் நூல்களும் உள்ளன. இதன் அடிப்படையில் தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், இலக்கணவிளக்கம், இலக்கணக்கொத்து, தொன்னூல்விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் முதலானவை

எழுத்திலக்கண மரபைச் சிறப்பாக விளக்குகின்றன. தமிழ் எழுத்திலக்கண மரபுகள் என்னும் பொருண்மையில் மேற்கண்ட மரபிலக்கண நூல்களை வரலாற்றுமுறை இலக்கண ஆய்வுக்கு உட்படுத்தும் விதத்தில் இப்பயிலரங்கம் நடைபெற உள்ளது.

இப்பயிலரங்கில் மரபிலக்கணத் தெளிவும் மொழியியல் அறிவும் பன்மொழிப் புலமையும் ஒருங்கேபெற்ற அறிஞர் பெருமக்கள் பயிற்றுவிக்க உள்ளனர். பல்கலைக்கழகம்/கல்லூரிகளில் தமிழியல், மொழியியல், வரலாறு ஆகிய துறைகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் முனைவர்பட்ட ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்களும் இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயனடையுமாறு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அன்புடன் அழைக்கிறது.

**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

- ❖ பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை – **40**
- ❖ பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: **22.1.2025** முதல் **31.1.2025** முடிய **10** நாட்கள்.
- ❖ பயிலரங்கு நேரம்: காலை **10.00 - 1.00** & மாலை **2.00 - 5.00**.
- ❖ பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
- ❖ பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
- ❖ பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும் தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.

❖ பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.

❖ இணையவழி விண்ணப்பத்தை **https://forms.gle/mNsYodQycGi2jvg79** என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு **(QR-code)** மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

❖ நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் **09.1.2025.** காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.

❖ செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு **10.1.2025.** அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.

❖ இப்பயிலரங்கில் பங்கேற்போர் **38** அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.

❖ பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**